Deposition of witness
(Chapter XXIII code of Criminal Procedure)
In the court of Judicial Magistrate No.I, Tindivanam.

**CASE NO.CC. 143/2022 CW-1**

Name : வேதபிரகாஷ்
Father / Husband name : அரிகிருஷ்ணன்
Village : பாண்டிச்சேரி
Age : 35
Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 this day 27.04.2026

Accused 1 to 3 absent. Petition u/s 317 CrPC filed and allowed. Defence counsel present. Witness identified by Tindivanam PS HC 2967 Tr.Manikandan.

**முதல் விசாரணை**

நான் தற்போது பாண்டிச்சேரியிலுள்ள HDFC வங்கியில் வேலை செய்துவருகிறேன். அசா.1 எனது அப்பா. அ.சா.2 கிருஷ்ணமூர்த்தி என்பவரை எனக்கு தெரியும். அ.சா.3 நாகலட்சுமி எனது அத்தை. பட்டியல் சாட்சி 4 கனகராஜ் என்பவரை தெரியும். 05.12.2021 அன்று எனது அத்தையும் அவரின் மகள் சரண்யா என்பவரும் பேராவூருக்கு எனது அத்தையின் கணவர் ஏழுமலையின் மற்றும் அவரின் மூத்த மகள் பிரபாவதி ஆகியோர்களை பார்ப்பதற்காக சென்றார். வழக்கின் எதிரிகளை எனக்கு தெரியும். பேராவூருக்கு சென்றபோது எதிரிகள் எனது அத்தை மற்றும் அவரின் மகளையும் அடித்ததாக போன் மூலம் எனக்கும் எனது அப்பாவிற்கும் எனது அத்தை சொன்னார். இதுசம்மந்தமாக நாகலட்சுமி கிளியனூர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். அப்போது போலிசார் நாகலட்சுமியை திண்டிவனம் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுக்கொள்ளுமாறு சொன்னர்கள். அன்றையதினமே காலை சுமார் 10.00 மணியளவில் சிகிச்சை பெற்றுச்கொண்டு வரும்போது நேரு வீதி மேல்பாலத்தில் நானும் எனது அப்பா, அத்தை மற்றும் சரண்யாவுடன் வாடகை காரில் சென்றபோது மேம்பாலத்தின்மீது 15 பேர் கொண்ட கும்பல் காரை வழிமறித்தார்கள். மூர்த்தி தடியால் எனது

அப்பாவின் இடது கண், கை ஆகிய இடங்களில் அடித்தார். எதிரி ராமு கத்தியால் எனது அத்தையின் இடது தோள்பட்டையில் வெட்டிவிட்டார். எதிரி கணேசன் கல்லால் எனது இடது கண், பின்னந்தலையில் அடித்தார். பின்னர் எதிரிகள் மூவரும் எங்களுக்கு கொலை மிரட்டல்விடுத்து சென்றார்கள். நாங்கள் இதுசம்மந்தமாக திண்டிவனம் காவல் நிலையம் சென்றபோது மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு செல்லுமாறு சொன்னார்கள். நானும் எனது அப்பா, அத்தை ஆகியோர் திண்டிவனம் அரசு மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக்கொண்டோம். சம்பவம் சம்மந்தமாக அப்பா திண்டிவனம் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். போலிசார் வழக்கு சம்மந்தமாக விசாரித்தார்கள்.

<u>**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**</u>

1. சம்பவம் நடந்த அன்று பேராவூருக்கு நான் சென்றேனா என்றால் இல்லை, போன் வந்தபிறகு சென்றேன். அத்தையை தாக்கியதாக சொல்வது நான் நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான், நான் சென்றபோது அத்தை வீக்கம் மற்றும் இரத்தக்காயத்துடன் இருந்தார். நாங்கள் சென்ற காரின் பதிவு எண் என்ன என்றால் தெரியாது, அது வாடகைக்கார். போலிசார் விசாரித்தபோதும் பதிவு எண்ணை சொன்னேனா என்றால் இல்லை. கிளியனூர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தபோது சிஎஸ்ஆர் பதிவு கொடுத்தார்களா என்றால் தெரியாது, அப்பா தான் கொடுத்தார், நான் வெளியில் இருந்தேன். கிளியனூர் காவல் நிலையத்திலிருந்து சிகிச்சைக்கு செல்ல சொன்னபோது மருத்துவ நமுனா கொடுத்தார்களா என்றால் ஒரு சீட்டு அப்பாவிடம் கொடுத்தார்கள்.

2. பேராவூருக்கு நான் சென்று பார்த்தபோது அத்தைக்கு எந்தயிடத்தில் காயம் இருந்தது என்றால் இடது தோள்பட்டையில் வீக்கக்காயம், இடது கன்னம் காயம் இருந்தது. அன்றையதினம் திண்டிவனம் அரசு மருத்துவமனையில் இரண்டு முறை சிகிச்சை எடுத்துக்கொண்டோம் என்றால் சரிதான். பேராவூருக்கு சென்று அத்தையை அழைத்து வந்தேனா என்றால் இல்லை, அங்கிருந்து அத்தை

வந்துகொண்டிருந்தார் பேராவூரில் தெருமுனையில் அத்தையை பார்த்து அழைத்துவந்தேன். கிளியனூர் காவல் நிலையத்தில் நடவடிக்கை எடுத்தார்களா என்றால் எடுத்தார்கள். அந்த வழக்கில் சம்மந்தப்பட்டவர்களை கைது செய்தார்களா என்றால் இல்லை. கிளியனூர் காவல் நிலையத்தில் யார் புகார் கொடுத்தது என்றால் அத்தை புகார் கொடுத்தார்.

3. திண்டிவனம் காவல் நிலையத்தில் கொடுத்த புகார் சம்மந்தமாக யார் என்னை விசாரித்தார் என்றால் காவல் நிலையத்திலிருந்த உதவி ஆய்வாளர் அன்றையதினமே மதியம் சுமார் 2 மணிக்கு மேல் விசாரித்தார். பேராவூரில் சம்பவம் எதுவும் நடக்கவில்லை, அதுசம்மந்தமாக புகார் எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. வாடகைக்காரின் ஓட்டுநரை விசாரித்தால் காரை மடக்கி அடித்தார்களா என்பது தெரியவரும் என்றால் சரிதான். போலிசார் விசாரணையில் முதலில் சிகிச்சை எடுத்துக்கொண்டு திரும்பி வரும்போது வழக்கின் சம்பவம் நடைபெற்றது என்று சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். 2வது சம்பவத்திற்கு பிறகு திண்டிவனம் அரசு மருத்துவமனையில் சிகிச்சை எடுக்கவில்லை, பாண்டிச்சேரியில் தனியார் மருத்துவமனையில் சிகிச்சை எடுத்துக்கொண்டேன் என்றால் சரியல்ல, திண்டிவனம் அரசு மருத்துவமனையில் தான் சிகிச்சை எடுத்துக்கொண்டோம். மேற்படி விவரத்தை எனது அப்பா தான் சொன்னார், நடந்ததாக சொல்லும் சம்பவம் அனைத்தும் பொய்யானது என்றால் சரியல்ல. எதிரிகள் அடித்ததாக சொல்லும் விவரம் அனைத்தும் பொய்யானது, உண்மையாக இருந்திருந்தால் எனது அப்பா சாட்சியம் அளித்திருப்பார் என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை முழுமையாக முடிக்கப்பட்டது.**

/ திறந்த நீதி மன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அதை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்பு அவருக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு அவர் சரி என்று ஒப்புக்கொண்டவுடன் என் முன்பாக கையொப்பமிட்டார்//

நீதித்துறை நடுவர் எண். 1 , திண்டிவனம்.